Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50
உதயன்
சுடர் : 39
கதிர் : 45
புதன்கிழமை
10 ஜனவரி 2024
மார்கழி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"அப்ப யாழ்ப்பாணக் கச்சேரியிலயும் டெங்குநுளம்புகள் தங்கட கச்சேரியை வைச்சிருக்கினம் போல"



நாடளாவிய ரீதியில்

# யாழ்ப்பாணத்திலேயே டெங்கு அதிதீவிரம்

**யாழ்ப்பாணம், ஜனவரி 10**

**நாடளாவிய ரீதியில் டெங்குத்தொற்று தீவிர நிலையை அடைந்த மாவட்டமாக யாழ்ப்பாணம் தரப்படுத்தப்பட்டுள்ளது. இதை 'அதித்விர நோய் நிலை' என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.** 15

## யாழ். மாவட்டத்தில் 485,219 வாக்காளர்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வரையிலான கணக்கெடுப்புகளின் அடிப்படையில், 4 இலட்சத்து 85 ஆயிரத்து 219 வாக்காளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

2019ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது 4 இலட்சத்து 79 ஆயிரத்து 504 பேர் வாக்களிக்கத் தகுதி 15

யாழ்ப்பாணம்

## மாவட்டச் செயலகத்தில் டெங்குக்குடம்பிகள்!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் பல இடங்களில் டெங்குக்குடம்பிகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அண்மைக்காலமாக டெங்குத் தொற்று தீவிரமாகப் பரவி வருகின்றது. டெங்குப் பரவலைக் 15

## ஆசிரியர் வீட்டில் நகை கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம், நீர்வேலியிலுள்ள ஆசிரியத் தம்பதியினரின் வீட்டிலிருந்து தங்க நகைகள் மற்றும் ஒருதொகைப் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் ஆசிரியர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை 15

வித்தியா கொலைவழக்கு

## மேன்முறையீடுகளை விசாரிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம், புங்குடுதீவுப் பகுதியில் சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவி கூட்டுப் 15

## ஆணொருவர் சடலமாக மீட்பு!

வவுனியா, ஜன. 10

வவுனியா - வீரபுரத்தில் உள்ள கல்குவாரியில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சுப்பையா மருதன் (வயது-78) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். திடீர் மரண விசாரணை அதிகாரி க.ஹரிபிரசாத் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். 15

வடமாகாணத்தில்

## ஜனவரி 16 இல் பொங்கல் விழா!

யாழ்ப்பாணம், ஜன. 10

வடமாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2024ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழா, ஜனவரி மாதம் 16ஆம் திகதி கிளிநொச்சி, பல்வராயன்கட்டில் முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து 15

## 23 ஏக்கர் காணியை விடுவிக்க ஏற்பாடு!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத்தினின் வசமுள்ள 23ஏக்கர்காணியைவிரைவில் விடுவிப்பதாக இராணுவத்தினரால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 15

## ஒற்றுமை, நல்லிணக்க சட்டவரைவு நிறைவேற்றம்

கொழும்பு, ஜன. 10

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. 15







மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டணக் குறைப்பு ஆணைக்குழு கைவிரிப்பு

**கொழும்பு, ஜன.10**

**மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான எந்தவொரு யோசனையும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த ஹேரத், இலங்கை மின்சார சபையால் மின்சாரக் கட்டணங்களைக் குறைப்பதற்கான பிரேரணை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தார். ஆனால் அதைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மறுத்துள்ளது.

இதுதொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத், தங்களிடம் அவ்வாறான கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்று கூறியுள்ளார். (எ-இ)

## டலஸைவிடமுடியாது!

கொழும்பு, ஜன. 10

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எம்முடன் இருக்க வேண்டிய அனுபவம்மிக்க அரசியல் தலைவர். அவருடன் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வரமுயற்சிப்போம் - இவ்வாறு பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

"இது எனது கருத்தே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல. 2005ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ச வெற்றிபெற டலஸ் அழகப்பெரும பெரும்பாடுபட்டார். எம்மைபோல இடதுசாரி பொருளாதார சிந்தனை கொண்டவரே டலஸ்" என்றும் நாமல் தெரிவித்தார். (ச-44)

## கட்டாக்காலி நாய்களால் விபத்துகள் அதிகரிப்பு

யாழ்.குடாநாட்டு வீதிகளில் சுற்றித் திரியும் கட்டாக்காலி நாய்களால் வீதி விபத்துகள் அதிகரித்துள்ளன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீதிகளில் தெருநாய்கள் நாலாபக்கமும் சிதறி ஓடுவதனால் மோட்டார் சைக்கிளில் செல்வோர் விபத்துகளில் சிக்குகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை மாத்திரம் வீதியால் பயணித்த 3 பேர் நாய்களுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-17)

## கறுப்பு உடையில் ஐ.ம.ச. எம்.பிக்கள்

புத்தாண்டின் முதல் நாடாளுமன்ற அமர்வு நேற்று நடைபெற்ற நிலையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்பு உடைகள் அணிந்து நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தனர்.

அதுதொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, நாட்டு மக்கள் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிரான போராட்டத்தின் அடையாளமாகத்தான் இன்று கறுப்பு உடையில் நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளோம் என்று தெரிவித்தார். (எ-இ)

## இரட்டைக்கொலை வழக்கு; சந்தேகநபருக்கு அச்சுறுத்து

வவுனியா, ஜன. 10

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபருக்கு நீதிமன்ற வளாகத்தில் வைத்து எரியுண்ட வீட்டு உரிமையாளரான குடும்பஸ்தர் அச்சுறுத்தல் விடுத்தார் என நீதிமன்றில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட வன்முறைச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்திருந்தனர்.

இந்த இரட்டைக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 6 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த நிலையில் வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வவுனியா நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர்களை மன்றுக்கு அழைத்து வந்தபோது எரியுண்ட வீட்டின் உரிமையாளரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று பிரதான சந்தேகநபர் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணை செய்யுமாறு வவுனியா பொலிஸாருக்கு மன்று உத்தரவு பிறப்பித்தது. (ச-18)

'அஸ்வெசும' பயனாளிகள்

## பாதுகாப்புத் திட்டத்தில் இணையப் பின்னடிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 10

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் உள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் இணைவதற்குப் பயனாளிகள் பின்னடிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்பட்ட பயனாளிகளிடம் கடந்த ஜூலை மாதம் தொடக்கம் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் இணைவதற்குச் சம்மதிப்போர் அதற்குரிய தொகையை மாதாந்தம் பணமாகச் செலுத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி வரை திட்டத்தில் இணைய விரும்புவோர் சம்மதம் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டபோதிலும் பயனாளர்கள் எவரும் முன்வரவில்லை. (ச-9)

## பெண் கைது

யாழ்ப்பணம், கோப்பாய் செல்வபுரம் பகுதியில் கஞ்சா மற்றும் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் அவர் கைது செய்யப்பட்டார். அவரது வீட்டிலிருந்து 100 கிராம் கஞ்சா, 10 லீற்றர் கசிப்பு மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-125-20)

## ஐ.ம.சு.கூட்டமைப்பை கட்டியெழுப்ப அனுமதி

கொழும்பு, ஜன. 10

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அனுமதி வழங்கியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழுவும், மத்திய குழுவும் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் கூடியது. இதன்போது அடுத்த தேர்தலை கூட்டணி அமைத்து எதிர்கொள்வதற்கும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ச-44)

## குற்றங்களில் ஈடுபட்டால் எம்.பிக்களுக்கு 3 மாதத் தடை

கொழும்பு, ஜன.10



நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சமாக மூன்று மாதங்களுக்கு இடைநீக்கம் செய்ய முடியும் எனச் சட்டமா அதிபர் தம்மிடம் விளக்கம் அளித்துள்ளார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் குற்றச்செயல் களுக்குத் தண்டனை வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டதன் பின்னரே இந்த முடிவு எட்டப்பட்டது என்றும் சபாநாயகர் அபேவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடியபோது சபாநாயகரால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. (எ-இ)



# புனித வெற்றி அன்னை; திருச்சொரூப பெருவிழா

மன்னார், ஜன. 10

மன்னார் மறைமாவட்ட பேசாலை புனித வெற்றி அன்னையின் மூவியரசர் பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்தர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது.

இதில் குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு அன்னையின் கையில் இருக்கும் பாலக இயேசுவை அருட்பணியாளர்கள் கையில் கொடுத்து ஆசீர்வதித்தனர்.

இந்தச் சடங்கைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபம் பேசாலை கிராமத்துக்குள் பவனியாகக் கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அன்னையின் பாதம் கடல்நீரால் கழுவப்பட்டதுடன் திருச்சொரூப ஆசீரும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குத் தொற்றாளர்களால் நிரம்பும் பரு. மருத்துவமனை

வடமராட்சி, ஜன.10

**பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடந்த முதலாம் திகதி முதல் 8ஆம் திகதிவரையில் 93 பேர் டெங்குத் தொற்றுடன் சிகிச்சை பெற்றுள்ளனர். நேற்றுமுன்தினம் வரை மருத்துவமனையில் 61 பேர் டெங்குத் தொற்றுடன் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.**

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் ஆண்கள், பெண்கள் விடுதிகளில் 80 படுக்கைகளே காணப்படும் நிலையில், எதிர்வரும் நாள்களில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் ஏனைய நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் நெருக்கடி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-100)

## சாவகச்சேரியில் டெங்கு ஒழிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 10

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில், சரசாலைப் பகுதிகளில் இந்தக் களத்தரிசிப்பு இடம்பெற்றது.

இதன்போது 13 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் ஒருவருக்கு எதிராகப் பொலிஸாரால் வழக்குப் பதிவும் செய்யப்பட்டது. (ச-9)

## பேக்கரிக்கு 'சீல்'

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வெதுப்பகம் ஒன்று நேற்று சாவகச்சேரி நகர பொதுச் சுகாதார பரிசோதகரால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தநிலையில், அவை பின்பற்றப்படாதநிலையில் வெதுப்பகம் நேற்று சீல் வைத்து மூடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. ( எ-9)

## பேருந்துச் சேவையின்றி நோயாளர்கள் சிரமம்!

கிளிநொச்சி, ஜன.10

அக்கராயன் பிரதேச மருத்துவமனை, முழங்காவில் ஆதார மருத்துவமனை என்பவற்றுக்குப் பேருந்துச் சேவைகள் நடத்தப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மேற்கில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் இந்த மருத்துவமனைகளுக்கும் சென்று திரும்ப வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பலப்பெருமாள் சந்தியில் இருந்து அக்கராயன் மருத்துவமனைக்கு 800 மீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது. முழங்காவில் மகா வித்தியாலய சந்தியில் இருந்து முழங்காவில் மருத்துவமனைக்கு ஒரு கிலோமீற்றர் தூரம் நடந்து செல்லவேண்டியுள்ளது. பல ஆண்டுகளாக இது தொடர்பாக அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டியபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-13)

## உரக் கொடுப்பனவை வழங்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.10

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோகப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரத்துக்குப் பணம் கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பலருக்குப் பணம் கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

விரைவில் பணம் கிடைக்கும் என அதிகாரிகள் கூறுகின்றபோதும், ஒரு மாதம் கடந்தும் உரத்துக்கான பணம் கிடைக்கவில்லை என்று தெரிவித்த விவசாயிகள், பணத்தை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (எ-13)

## கொடுப்பனவு விநியோகம்!

யாழ். ஜன. 10.

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி பயனாளர்களுக்கு டிசெம்பர் மாத நிவாரண உதவிக் கொடுப்பனவுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் கொடுப்பனவுகளைப் பெறலாம் என்று சமுர்த்தி வங்கியினர் அறிவித்துள்ளனர். (ச-9)

## சூரியமின்கலத்துக்கு தென்னை இடையூறு

### ஸ்கந்தபுரம் விவசாயிகள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜன.10

ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தின் சூரிய மின்கலன்கள் இயங்குவதற்கு தென்னை மரங்கள் தடையாக உள்ளன என்று ஸ்கந்தபுரம் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சூரியசக்தி மூலம் நீர் இறைக்கும் இயந்திரங்கள் இயக்கப்படும்வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. சூரிய மின்கலம் பொருத்தப்பட்டுள்ள பகுதியில் உள்ள தென்னை மரங்களால் சூரியமின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படுகின்றது என்று விவசாயிகள் கூறுகின்றனர். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்என்றும்அவர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

## வாகன இறக்குமதி; அரசிடம் தீர்மானமில்லை

எந்த வகை வாகனங்களை இறக்குமதி செய்வது என்பது தொடர்பில் அரசாங்கத்திடம் தற்போது எந்தத் தீர்மானமும் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய தெரிவித்துள்ளார். ஆயிரத்துக்கும் குறைவான இயந்திரத்திறன் கொண்ட வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வியொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (எ-இ)

## புதினம் தெரியுமோ?

**போனவருசம் யாழ்ப்பாணத்தில நடந்த பொங்கல் விழாவுக்கு ரணில் வந்திருந்தவர். ஆனால் காணாமற் போனவையின்ர உறவுகளும், கம்பஸ் பெடியளும் அவர் வாறதுக்கு எதிரா ஆர்ப்பாட்டம் செய்தவை. சனத்தைக் கட்டுப்படுத்த ஏலாமல் கடைசியில பொலிஸ்காரர், எல்லாருக்கும் தண்ணியை விசிறித்தான் கலைச்சவை. ஆனாலும் அதுக்கும் அசராமல் கனபேர் அங்க நிண்டு போராடினவை. பகிடி என்னெண்டால் அப்பிடித் தண்ணி விசிறவந்த பவுசர் இடையில பழுதாயும் போனது. சரி, இப்ப என்னத்துக்கு அந்தப் பழங்கதையெண்டு நினைப்பியள். எல்லாமே பழங்கதையா, கனவா போகக் கூடாதெல்லோ. அதுக்குத்தான் இந்தப் பீடிகை.**

**போனவருசம் ரணிலுக்கு எதிராப் போராடினவைக்கு பொலிஸ் கேஸ் போட்டு, அந்த வழக்கு கிடப்பில போடுப்பட்டு, கேஸில பிரதிவாதியா இருந்தவையை முந்தநாள் தான் நீதிமன்றம் வழக்கில இருந்தே விடுதலை செய்தது. இப்பிடியெல்லாம் பிரச்சினையள் இருக்கேக்க, போனமுறை எந்த யாழ்ப்பாணத்துக் கம்பஸ் பெடியள் ரணிலுக்கு எதிராப் போராடிச்சினமோ., அதே கம்பஸில படிக்கிற தமிழ்ப்பெடியளை தனியார் விடுதிக்கு கூப்பிட்டு, டின்னர் குடுத்துக் கவனிச்சிருக்கிறார் ரணிலார். 35 பேர் அந்தச் சாப்பாட்டு மீட்டிங்குக்குப் போனவையாம். ரணிலோட செல்பி எடுத்ததுக்காக கில்மிஷா எண்ட சின்னப்பிள்ளையை பேஸ்புக்கில வறுத்தெடுக்கிற விசிலடிச்சான் குஞ்சுகள்,இப்பிடி கம்பஸ் பெடியள் ரணிலைப் போய் சந்திச்சு சாப்பிட்டு வந்த விசயத்தில மட்டும் கப்சிப்பா இருக்கினம். ஏனெண்டால் ரணிலிட்ட போனவையில கனபேர், பேஸ்புக்கில கம்பு சுத்துறவையின்ர ஆக்களாம். இவையும் ரணிலோட சந்திப்பு எண்டவுடன் யோசிக்காமல் போட்டினம் எண்டும் அவை சளாப்ப ஏலாது. ஏனெண்டால் ரணிலோட போட்டோ எடுக்கேக்க மட்டும் தங்கட முகத்தை மறைச்சவைக்கு, சாப்பாட்டு மீட்டிங்குக்கு வரச்சொல்லேக்க மட்டும் மாட்டன் எண்டு சொல்லத் தெரியாதோ?**

**சரி, பொதுவான கம்பஸ் விசயங்களைப் பற்றி ரணிலோட கதைக்கப் போயிருந்தீங்கள் எண்டால், சந்திப்பு முடிஞ்சவுடன அதைப் பற்றி சனத்துக்கோ, கம்பஸில படிக்கிற மிச்ச ஆக்களுக்கோ தெரியப்படுத்தியெல்லோ இருக்கவேணும்? ஏன் அவை இதுவரை அதைச் செய்யாமல், மானை விழுங்கின மலைப்பாம்பு மாதிரி பம்மிக்கொண்டு திரியினம்? ரணில் ஜனாதிபதியா வந்தபிறகு, இதுவரைக்கும் எந்தவொரு கம்பஸ் பெடியளோ, கம்பஸ் மாணவர் அமைப்புகளோ ரணிலைப் போய்ச் சந்திக்கவேயில்லை. ஏனெண்டால் அவங்கள் ரணிலை ஒரு ஜனாதிபதியா ஏற்றுக்கொள்ளவுமில்லை, அதோட அரகலயக்காரருக்கு ரணில் செய்த நஞ்சுவேலையை அவங்கள் மறக்கவுமில்லை. அதாலதான் ரணில் எத்தினையோ தரம் கூப்பிட்டும் அவங்கள் ஆளைச் சந்திக்கப் போகேலை. ஆனால் எப்பவும் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நீதிக்காகப் போராடுற யாழ்ப்பாணக் கம்பஸ்காரர் மட்டும் , ரணிலோட சாப்பாடு எண்டவுடன் சடாரெண்டு ஓடிப் போயிருக்கினமாம். இனி உப்பிட்டவரை உள்ளளவும் நினைச்சுக் கொண்டு, அவருக்கு விசுவாசமா வாலாட்டப் போயினமோ எண்டதுதான் சனத்தின்ர சந்தேகம்.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## மகரம்

பிறர் செய்ய முடியாத சவாலான காரியங்களை ஏற்று சாதித்துக் காட்டுவதில் வல்லவர்களான நீங்கள், சிறந்த பேச்சாளர்கள். அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டுமென்பதில் ஆர்வம் காட்டும் நீங்கள், அன்பின் அடையாளமாக இருப்பவர்கள்.

ராசிக்கு இலாப வீட்டில் சுக்ரனும், புதனும் நிற்கும்போது இந்தாண்டு பிறப்பதால் உற்சாகமாக பல வேலைகளை விரைந்து முடிப்பீர்கள்.

புத்தாண்டு பிறக்கும் போது குரு பகவான் உங்கள் ராசிக்கு 4ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் இனந்தெரியாத கவலைகள் வந்து போகும்.

புதியவர்களை நம்பி பழைய நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். நெருக்கமானவர்கள் சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள். அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடுவதால் வீண்பழிக்கு ஆளாவீர்கள். வாகனத்தைக் கொஞ்சம் கவனமாக இயக்குங்கள். விபத்துகள் நிகழக்கூடும். மன அமைதி பெற ஆன்மிகம், யோகா, தியானத்தில் ஈடுபடுவது நன்மை பயக்கும்.

குரு பகவான் 01.5.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 5ம் வீட்டிலேயே தொடர்வதால் பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேர்வீர்கள். வறண்டிருந்த பணப்பை கொஞ்சம் நிரம்ப ஆரம்பிக்கும். நீண்டகாலமாக தடைப்பட்டிருந்த காரியங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். கல்வியாளர்கள், ஆன்மிகவாதிகளின் நட்புக் கிடைக்கும்.

சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். விலகிச் சென்ற சொந்தபந்தங்கள் மனம்மாறி வலியப் பேசுவார்கள். வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டுக்கு குடிபுகுவீர்கள். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு கைநிறைய சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கும். வெளிநாட்டினரால் திடீர் திருப்பங்கள் ஏற்படும்.

இந்த வருடம் முடிய உங்கள் ராசிக்கு 3ல் ராகுவும், 9ம் வீட்டில் கேதுவும் அமர்கிறார்கள். ராசிக்கு 3ம் வீட்டில் ராகு அமர்வதால் சொத்து வாங்குவீர்கள். பெரிய பதவிகள் தேடி வரும்.

சவால்களைச் சமாளிக்கும் மனோபலம் அதிகரிக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். நாடாளுபவர்களின் நட்புக் கிடைக்கும். இளைய சகோதர வகையில் இருந்த மனத்தாங்கல் நீங்கும். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். வழக்குகள் சாதகமாகும். 9ம் வீட்டில் கேது அமர்வதால் தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். அடிமனதில் இருந்து வந்த கவலைகள் நீங்கும். தூக்கம் வரும். கொடுக்கல் வாங்கலில் இருந்த சிக்கல்கள் தீரும்.

நீண்டநாளாக இழுபறியாக இருந்த வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். நீங்களே களத்தில் இறங்கி வேலை செய்வது நல்லது. இல்லத்துக்குத் தேவையான நவீன மின்னணு சாதனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வருட ஆரம்பம் முதல் வருடம் முடியும் வரை பாதச் சனி தொடர்வதால் வீண் அலைச்சல், பதற்றம் வந்து போகும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். சில விஷயங்களுக்கு உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப் பாருங்கள். அடுக்கடுக்கான வேலைகளால் ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். மனதில் இனம்புரியாத கவலைகள் வந்து போகும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகளும் அதிகரிக்கும்.

**வியாபாரிகளே!** பெரிய அளவில் முதலீடுகள் செய்ய வேண்டாம். ஏப்ரல், மே மாதங்களில் கடன்கள் வசூலாகும். புதுத் தொடர்புகள் கிடைக்கும்.

**உத்தியோகஸ்தர்களே!** வேலைச்சுமை அதிகமாகும். மேலதிகாரி உங்களைத் தவறாக புரிந்துகொள்வார். ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் சம்பளம், சலுகை கூடும். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**இந்த வருடம் வேலைச்சுமையையும், திடீர்ப் பயணங்களையும் தந்தாலும், பணவரவையும், புகழ், கௌரவத்தையும் தருவதாக அமையும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பல வேலைகள் தடைப்பட்டு முடியும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்:** உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நண்பர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். நினைத்த காரியம் நிறைவேறும் நாள்.

**கடகம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். கனவு நனவாகும் நாள். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. அதிரடி சலுகைகள் மூலம் இலாபமடைவீர்கள். உழைப்பால் உயரும் நாள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள். பண உதவி கிடைக்கும்.

**துலாம்:** முகப்பொலிவு கூடும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். புதியவர்கள் நண்பர்கள் ஆவார்கள். பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருச்சிகம்:** வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். திடீர்ப் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**மகரம்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். காணாமல் போன உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள். மனதுக்கு உற்சாகம் கிடைக்கும்.

**கும்பம்:** சொன்னசொல்லைக்காப்பாற்றுவீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்துசிலமுடிவுகள்எடுப்பார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**மீனம்:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். உடல் நலம் சீராகும்.



## யாழ்ப்பாணம், எழுதுமட்டுவாழில் திடீர்ச் சுற்றிவளைப்புத் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் மற்றும் எழுதுமட்டுவாழ் பிரதேசங்களில் பொலிஸாரால் விசேட சோதனை நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்ன வழிகாட்டலில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்தவின் நெறிப்படுத்தலில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். மோப்பநாய்களும் சோதனையில் ஈடுபடுத்தப்பட்டன.

அத்துடன் போதைப்பொருள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்குப் பொதுமக்களுக்கு தொலைபேசி இலக்கங்களும் பொலிஸாரால் வழங்கப்பட்டதுடன், பேருந்துகளில் ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன. எழுதுமட்டுவாழ் பகுதியில் பேருந்துகள் மறிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டன. (எ-26)

## 207 குழந்தைகளுக்கு சின்னமுத்து தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். மாநகரப் பகுதிகளில் சின்னமுத்து நோய்க்கான தடுப்பூசி மருந்து 207 குழந்தைகளுக்குப் போடப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை மாநகரப் பகுதியில் இதற்கென ஒழுங்கமைக்கப்பட்ட நான்கு நிலையங்களில் வைத்து 6 மாதம் தொடக்கம் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு இந்த சின்னமுத்து நோய்க்கான தடுப்பூசி போடப்பட்டது.

சின்னமுத்து நோய்க்கான தடுப்பூசியை போடத் தவறியவர்களுக்கு பிறிதொரு நாளில் அதைப் போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

## சென்.ஜோன்ஸ் பகுதியில் புகையூட்டல் பணிகள்!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சூழவுள்ள பிரதேசத்தில் நுளம்புகளை விரட்ட புகையடிக்கும் பணிகள் சுகாதாரப் பிரிவினரால் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இந்தப் பகுதியில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்துக் காணப்பட்டதையடுத்து இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பாறை மக்களுக்கு சந்நிதி ஆச்சிரமம் உதவி

மட்டக்களப்பு, ஜன. 10

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் அத்தியாவசிய உலருணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அம்பாறை லகுகல பிரதேச மூன்று கிராம அலுவலர் பகுதிகளைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு 7 இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று குறித்த உதவிகளை வழங்கினார். (ச-66)



# கில்மிஷாவுக்கு கௌரவிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 10

தென்னிந்தியாவில் வெற்றிவாகை சூடிய ஈழத்துச் சிறுமி கில்மிஷா யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மார்கழி இசை விழாவில் வைத்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார். யாழ். இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் மற்றும் யாழ்.வணிகர் கழகம் என்பன இணைந்து நடத்திய மார்கழி இசை விழாவின் மூன்றாவது நாள் நிகழ்வில் வைத்தே கில்மிஷா கௌரவிக்கப்பட்டுள்ளார். (ம-66)

# முதற்கட்ட புனரமைப்பு நிறைவு

கொடிகாமம், ஜன. 10


கைதடி கிழக்கு ஊறல் சுடுகாட்டுக்குச் செல்லும் பிரதான வீதியில் 50 மீற்றர் நீளமான இடத்தில் பெரிய குழி நீண்டகாலமாக இருப்பதால் மழை காலங்களில் இந்தப் பாதை வழியே செல்லும் மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டனர் .

மழை காலங்களில் அதிக வெள்ளம் தேங்குவதால் அந்தப் பகுதி மாணவர்கள் பாடசாலை செல்லாமல் விடும் சம்பவங்களும் அதிகம் ஏற்பட்டதால் அப்பகுதி இளைஞர்கள் மக்களின் பங்களிப்புடன் பெரிய குழியை புனரமைத்து போக்குவரத்தை இலகுவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தற்போது அதன் முதல் கட்டம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (ரி-159)





யாழ்.மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட தாழ்நிலப் பிரதேசங்களிலுள்ள ஒரு பகுதியினருக்கு யாழ். சாள்ஸ் பொறோமியோ நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் பிரான்ஸ் வாழ் நண்பர்களின் உதவியில் நுளம்பு வலைகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ச-63)



# புத்தாண்டுப் பிரமாணம்

யாழ்ப்பாணம், ஜன. 10

2024 புதிய ஆண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் 'வலுவான எதிர்காலத்துக்கான தொடக்கவுரை' எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-66)

# இளைஞன் கைது

முல்லைத்தீவு, ஜன. 10


புதுக்குடியிருப்புக்கு உட்பட்ட மாணிக்கபுரத்தில் வாள் மற்றும் உயிர்கொல்லி போதைப்பொருள்களுடன் 29 வயதுடைய சந்தேகநபர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரைக் கைது செய்யும்போது அவரிடம் இரண்டு வாள்களும், 4 கஞ்சாப் பொதிகளும், 600 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டதாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-19)

# கிளிநொச்சி மருத்துவமனைக்கு கண்பரிசோதனை இயந்திரம்




கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு 2.5 மில்லியன் ரூபா பெறுமதியிலான கண் பரிசோதனை இயந்திரமொன்று கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டது. மருத்துவமனைப் பணிப்பாளரால், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, கனடா, மொன்றியலில் இயங்கும் 'புறுட்ஸ்' கபி நிறுவன உரிமையாளரின் நிதிப்பங்களிப்பில் இந்த இயந்திரம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட 100 பயனாளிகளுள் முதற்கட்டமாக 39 பேருக்கான இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-9-100)



# துர்க்காதேவி ஆலய திருப்பணி துரிதகதி

யாழ்ப்பாணம், ஜன. 10

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் திருப்பணி வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. இந்தத் திருப்பணி வேலைகளைத் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ கடந்த திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் மார்ச் மாதம்25 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை இயக்கத்தின் அரசியல் ஆய்வரங்கு





யாழ்ப்பாணம், ஜன. 10
தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சம கால அரசியல் அரங்கு அண்மையில் கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்க ரநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ' உத்தேச கடற்சட்டத்திருத்த வரைவு' எனும் தலைப்பில் சமூகச் செயற் பாட்டாளர் இரேனியஸ் செல்வின், 'புத் தாண்டை எதிர்கொள்ளல்' என்னும் தலைப் பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் மற் றும் 'இமாலயப் பிரகடனம்' எனும் தலைப் பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறைத்தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் தமிழ் அரசியல் நோக்கு நிலையிலிருந்து உரை யாற்றினர். (ச-13-66)



முல்லைத்தீவு, திருமுறிகண்டியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு அண்மையில் உலருணவுப் பொருள்கள் வழங் கப்பட்டன. இந்து மாமன்ற அலுவல்கள் திணைக்களத்தால் திரு முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் ஒரு மில்லியன் ரூபா நிதியில் இருந்து இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-13)



முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங் களுக்கு அன்பேசிவம் அறக்கட்டளையூடாக உலர் உணவுப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. சுவிஸ் சூரிச் அருள் மிகு சிவன் கோயில் சைவத் தமிழ்ச் சங்கத்தின் நிதிப்பங்களிப்பில் அவை கையளிக்கப்பட்டன. (ச-19)



சாவகச்சேரியைச் சேர்ந்த அமரர். நேசதுரை நிலக்சனின் பிறந்த நாள் ஞாபகார்த்தமாக அவரது நண்பர்களால் உருவாக்கப்பட்ட 'கன்று' அறக்கொடை நிதியத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் அண்மையில் யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (ச-66)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது மன்றின் முன்னாள் தலைவரும், தற்போதைய கௌரவ உப தலைவரும், சாவகச்சேரி அம்பிகா மருந்தகத்தின் உரிமையாளரும், சமூக சேவையாளருமான

**திரு.நமசிவாயம் சிவபாலன்**



அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக 11.12.2023 பதவிப் பிரமாணம் செய்ததையிட்டு அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**வாழ்த்துவோர்:**
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

(CR 41493) A-1


## INVITATION FOR BID (2024/01)
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

*"Bidding will be conducted through National Competitive Bidding in Public Finance Circular No. 04/2016 (iii) and its amendments" Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated, 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.*

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road Jaffna. (T.P:021 222 4966, Fax: 021 222 9971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 PM on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing / Purchasing Period | | | From 10.01.2024 until 23.01.2024 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 17.01.2024 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 24.01.2024 | | | |
| Bid ID | Description of Work | Estmated Cost (Rs.) In Million (without VAT) | Cont-ract Period | Grade Required | Non-Refundable Fee | Security Amount | Validity Period |
| NP/04/41/2024/ Unicef/W/01 | Electrical Work for MOH Office at MOH Kopay, Jaffna | 0.84 | 66 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 8,500.00 | Till 10.04.2024 |
| NP/04/41/2024/ Unicef/W/02 | Improve-ment Work at MOH Velanai | 1.50 | 75 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 10.04.2024 |
| NP/04/41/2024/ Unicef/W/03 | Improve-ment Work at PHC Ariyalai, Navalady | 0.72 | 63 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 7,200.00 | Till 10.04.2024 |

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Service,
Jaffna.

(CS 41492) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# எது உண்மையான பொங்கல் விழா?

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் கிழக்கில் நடத்தப்பட்ட ஜல்லிக்கட்டுப் போட்டியும், பொங்கல் விழாவும் சமூகவலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் பேசுபொருளாகியிருக்கின்றது. தமிழ் மக்களின் கலாசாரப் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் இவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன என்பது மகிழ்ச்சியான விடயமே. தைத்திருநாளான தைப்பொங்கல் உழவர்களால், விவசாயிகளால் கொண்டாடப் படுவது. தங்கள் விளைச்சலுக்காக விவசாயிகள் சூரியனுக்கு நன்றி கூறும் நாள். ஜல்லிக்கட்டுப் போட்டி, பொங்கல்விழா என கோலாகலம் கொண்ட கிழக்கு மாகாணத்தில் விவசாயிகளும், விவசாயத்தின் பங்காளிகளான பண்ணை யாளர்களும் மகிழ்வுடன் இருக்கின்றார்களா? கொண்டாடும் மனநிலையில் உள்ளார்களா? என்பதையும் ஆராய வேண்டியுள்ளது.

அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் கால்நடைப் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை நாடறிந்தது - உலகறிந்தது. மயிலத்தமடு, மாதவனையில் உள்ள ஏறத்தாழ 996 குடும்பங்கள், பண்ணையாளர்கள் நாள்தோறும் தங்கள் கால்நடைகளை - தங்கள் குடும்பத்தில் ஒருவராகக் கருதும் காளைகளை, பசுமாடுகளை இழந்து தவிக்கின்றனர். மயிலத்தமடுவில் அத்துமீறிக் குடியேறியிருக்கும் சிங்களக் குடியேற்றவாசிகளால் இந்தக் கொடூரங்கள் அரங்கேற்றப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டு இந்த மேய்ச்சல் தரை தமிழ்ப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் 2012ஆம் ஆண்டிலிருந்து சிங்கள விவசாயிகள் - அத்துமீறிய குடியேற்றத்தின் மூலம் அந்த மேய்ச்சல் தரையை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். தமிழ்ப் பண்ணையாளர்கள் அதற்கெதிராக நீதிமன்றத்தை நாடியபோதும் - நீதிமன்றத்தின் உத்தரவுகளையும் மீறி இந்த ஆக்கிரமிப்புகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. மேய்ச்சலுக்குச் செல்லும் தமிழ்ப் பண்ணையாளர்களின் மாடுகள் சுருக்கிட்டுப்பிடிக்கப்படுகின்றன, வெடிவைத்துக் கொல்லப்படுகின்றன. இது அண்மைய நாள்களில் அதிகரித்திருக்கின்றது. இதுவரையில் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் இவ்வாறு கொல்லப்பட்டிருக்கின்றன.

கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான் பதவியேற்ற பின்னரும் இந்தக் கொடூரம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. அரசாங்கத்துடன் சிறந்த இணக்கப்பாட்டைக் கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான் தமிழ்ப் பண்ணையாளர்களுக்கு எதிரான இந்தக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவாரானால், தமிழ் மக்களுக்கு அதுவே பொங்கல்விழா - அதனால் ஏற்படும் மகிழ்ச்சியே கொண்டாட்டம். அதைச் செய்யாது எத்தனை ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்தினாலும் - பொங்கல் விழா நடத்தினாலும் அவையாவும் பயனற்றவையே.




# எதிர்காலத்தில் வீழ்ச்சியுறும் இலங்கையின் சனத்தொகை

**கொழும்பு, ஜன.10**

**இலங்கை எதிர்காலத்தில் கணிசமான சனத்தொகை வீழ்ச்சியை எதிர்கொள்ளும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் மானிடவியல் பேராசிரியர் டபிள்யூ இந்திரலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.**

இந்த விடயத்தில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன என்றும், இலங்கையில் பிறப்புகளின் எண்ணிக்கை 25 வீதத்தினால் குறைவடைந்தமை மிக முக்கியமான காரணிகளில் ஒன்று என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் பதிவு செய்யப்படும் பிறப்புகளின் எண்ணிக்கை இறப்புகள் எண்ணிக்கையை அண்மித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்வதன் காரணமாக இந்த நிலைமை மேலும் மோசமடையும் சாத்தியம் காணப்படுகின்றது என்றும் பேராசிரியர் கூறியுள்ளார். (எ-இ)

# மருத்துவ ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஜன.10

நிறைவுகாண் மருத்துவ ஊழியர்கள் நேற்றுக் காலை முதல் தொழிற்சங்க வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

35 ஆயிரம் ரூபா கொடுப்பனவு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என்று நிறைவுகாண் மருத்துவ ஊழியர்களின் கூட்டு ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். (எ-இ)

# சம்பள உயர்வு கோரும் இ.போ.ச. ஊழியர்கள்

இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் சம்பளத்தை அதிகாரபூர்வமாகத் திருத்தியமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை இ.போ.ச. ஊழியர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தச் சங்கத்தின் பொதுச்செயலாளர் சேபால லியனகே தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் சம்பளத் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்றும், 5 வருட கால தாமதத்தை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

# ஜனாதிபதி இல்லத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு, ஜன.10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் அமைந்துள்ள கொள்ளுப்பிட்டி 5ஆவது வீதியின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் வசிப்பவர்களின் விவரங்களை பாதுகாப்புத் தரப்பினர் சேகரித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. 2022ஆம் ஆண்டு நடந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு எரிக்கப்பட்டது. தற்போது அந்த வீடு திருத்தப்பட்டுள்ளது. அவர் விரைவில் மீண்டும் தனது தனிப்பட்ட இல்லத்துக்குத் திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# லசந்த கொலையாளிகளின் பொறுப்புக்கூறல் அவசியம்

## மன்னிப்புச்சபை வலியுறுத்து

கொழும்பு, ஜன.10

மூத்த ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இலங்கை அரசாங்கம் அந்தக் கொலையுடன் தொடர்புடையவர்களை தாமதமின்றி பொறுப்புக்கூறச் செய்யவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

இந்த வழக்கு உள்ளக ரீதியில் தீர்க்கப்படும் என்று இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தபோதும், வழக்கு விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

## நாளை

11.01.2024

**வியாழக்கிழமை**

**மார்கழி 26**

சுபநேரம் : 08.03 – 09.33

ராகுகாலம் : 02.03 – 03.33

## நாளொரு நல்வார்த்தை

**அறிவுக்கு ஏற்றது, மக்களுக்கு நன்மை பயப்பது, மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ அதைப் பற்றியே பேசுங்கள்.**

**- பெரியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணி மோசடிக் குற்றச்சாட்டுகளில்

# உறுதிகள் தொடர்பான அறிவு பொலிஸாருக்கு இல்லை!

## சட்டத்தரணிகள் குழு ஜனாதிபதியிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 10

காணி உறுதி மோசடிகள் தொடர்பில் பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிலையில், பொலிஸார் தம்மை கண்ணியத்துடன் நடத்தவில்லை என்றும் காணி உறுதி தொடர்பான அறிவு பொலிஸாருக்கு இல்லையென்றும் சட்டத்தரணிகள் குழுவொன்று ஜனாதிபதி ரணிலிடம் முறையிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடமாகாணத்துக்கு அண்மையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது சட்டத்தரணிகளையும் கடந்த 6ஆம் திகதி அவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே ஜனாதிபதியிடம் இந்த விடயங்களை மேற்படி சட்டத்தரணிகள் தெரியப்படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணி மோசடிகள் பரவலாகப் பதிவாகும் நிலையில், இவ்வாறு முறைப்பாடுகளை வழங்குவோரிடம் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக கண்ணியமற்ற வகையில் பொலிஸார் கைது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

உறுதியை நிறைவேற்றும் நொத்தாரிஸை குறிப்பாக சட்டத்தரணியாகப் பணியாற்றும் நொத்தாரிஸை குறுகிய கால அவகாசத்துடன் விசாரணைக்கு அழைக்கின்றனர். இதனால் மேற்படி நொத்தாரிஸு சட்டத்தரணிகள் முன்பிணை பெற்றுத் தம் பணியைத் தொடர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பொலிஸார் காணி உறுதி தொடர்பான முழுமையான புரிதல் இல்லாதவர்களாக இருப்பதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த நிலையைத் தவிர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தக் கலந்துரையாடலில் ரணிலிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-125)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். பிரதேசத்திலுள்ள இரத்தினக்கல் ஆபரண வர்த்தகர்களை பதிவுசெய்தல் மற்றும் அவர்களுக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குதல் ஆகியவற்றுக்கான நடமாடும்சேவை தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையால் நாளை வியாழக்கிழமை மானிப்பாய் வீதியிலுள்ள யாழ். வணிகர் கழகப் பணிமனையில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை முன்னெடுக்கப்படவுள்ளது. (ச)

## மரண அறிவித்தல்

மண்ணில் 12.06.1968



விண்ணில் 06.01.2024

### சுதர்ஷனா கொங்காதரன்

நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் நாட்டை வதிவிடமாகவும் கொண்ட சுதர்ஷனா கொங்காதரன் அவர்கள் 06.01.2024 சனிக்கிழமை அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமலிங்கம் மற்றும் இராசேஸ்வரி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் ஞானப்பூங்கோதை தம்பதியரின் பாசமிகு மருமகளும், கொங்காதரனின் அன்புத் துணைவியாரும், கர்ஷனா, கீர்த்தனா, கஜமுகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்தகுருபரன், ஜெயக்குமார், ராஜ்மோகன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பஞ்சாட்சரதேவி, சோதிதாசன், கிருஷ்ணராசா, சத்தியகலாதேவி, சுபாஜினி, காஜத்திரிகா ஆகியோரின் அருமை மைத்துனியும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் கல்யாணி, மனோகரராணி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், காலஞ்சென்ற கணேசன், சிதம்பரநாதன் மற்றும் அன்னபூரணி, காலஞ்சென்ற பரமேஸ்வரி சரவணமுத்து, கேதீஸ்வரி - அங்குசபாலன், மற்றும் சாரதாமணி காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் நகுலேஸ்வரி - கோடீஸ்வரன் ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்ற பார்வதி குகதாசன் மற்றும் தில்லைநாயகி கனகரெத்தினம், காலஞ்சென்ற மீனாட்சி இலங்கைநாதன் காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் உமாமகேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் சுசீலாதேவி, சிவனேஸ்வரன், கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பிரான்ஸ் நாட்டில் 95 rue marcel Sembat.93430 Villetaneuse. என்னும் இடத்தில் நடைபெறும். அத்தோடு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நயினாதீவு 2 ஆம் வட்டாரத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறும் என்பதனை அறியத்தருவதோடு இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**2 ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு,**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs 53433 (N-1)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 27.04.1954



மறைவு 11.12.2023

கடந்த (11.12.2023) திங்கட்கிழமை அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா சற்குணலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (08.01.2024) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.01.2024) புதன்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**கொத்துக்கட்டி வீதி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

**குடும்பத்தினர்.**

(CS 27621) A-1

## மரண அறிவித்தல்



### சிதம்பரநாதன் ஏகம்பரநாதன்

வரணி இயற்றாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் ஏகம்பரநாதன் நேற்று (09.01.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் சிதம்பரநாதன் திருமதி வள்ளிநாயகி தம்பதியரின் அன்பு மகனும், சிவசோதி அவர்களின் அன்புக் கணவரும், சிவஞானபதி (முன்னாள் யா/வீரசிங்கம் மத்திய கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவமலர், சிவராமலிங்கம், சிவராசமலர், சிவரஞ்சிதமலர், சிவாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜிதா, விநோதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சங்கநிதி, விநோதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பருத்தித்துறை) ஆகியோரின் மாமனும், அபிஷா, அக்சிதா, அஜீன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2024) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு இடம்பெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 237619) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

பொருள்: வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.
- வள்ளுவர்



# மன அழுத்தத்தை முகாமை செய்தல்

■ நடேசு தயாளன்

உடல் ரீதியானதும் உளரீதியானதுமான தாக்கத்தை உண்டுபண்ணும் மனஎழுச்சி நிலைகள் ஒருவரிடையே பதற்றமான நிலையைத் தோற்றுவிப்பதாக இருந்தால் அது மனஅழுத்தமாகும். மன அழுத்தமானது உள்ளார்ந்தமானதாக அல்லது வெளிவாரியானதாக அமைந்து காணப்படலாம். வாழ்க்கைச் செயன்முறையில் மன அழுத்தம் என்பது மிகவும் பின்னிப் பிணைந்தது. அனைவரும் இந்த மன அழுத்தத்தில் ஓர் அளவு மட்டத்தையாவது பெறுபவர்களாக உள்ளனர். எனவே இத்தகைய மன அழுத்த நிலைகள் பற்றியும் அதனைக் குறைத்தல் அல்லது இல்லாது செய்தல் தொடர்பில் முகாமைத்துவ அறிவு உடையவர்களாகவும் விளங்குதல் அவசியமானதாகும்.

## எதிரான நிலைகளையே மனஅழுத்தம் ஏற்படுத்தும்

மன அழுத்த நிலையானது எதிரான நிலையையே ஒருவரது தொழில் வாழ்க்கை நிலைகளில் உண்டுபண்ணுவதாகவுள்ளது. மன அழுத்த நிலையானது இன்றைய சமூக தொழில் உலகில் முக்கியமானதொன்றாக மாறியுள்ளது. அதிகளவானவர்கள் தொழில் உலகில் உயர்ந்தளவான மனஅழுத்த நிலைக்கு உள்ளானவர்களாக உள்ளனர். தொழில் உலகைப் பொறுத்தவரையில் மன அழுத்தம் காரணமாக எழுகின்ற பிரச்சினைகளானவை இன்று உலகில் முக்கியமானதாக மாறியுள்ளன. ஆறு நபர்களுக்கு ஒருவர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மனஅழுத்தத்துக்கு உள்ளாகின்றமை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஒருவர் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாக அவர் உணரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரிடம் மன அழுத்த நிலைகளை அவதானிக்கமுடியும். இத்தகைய மன அழுத்த நிலையானது ஒருவரது ஊக்கலை உற்பத்தி இயலளவை செயற்றினைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. உலகளாவிய ரீதியிலான ஆய்வானது மன அழுத்தமானது ஆண்களிலும் பார்க்க பெண்களில் வேறுபட்ட வகையில் தாக்கம் செலுத்துவதனை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

முப்பது நாடுகளில் 13 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்ட 30 ஆயிரம் பேரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது பின்வரும் முடிவுகளை வெளிப்படுத்துவதாகவுள்ளது. 13 வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கொண்ட முழுநேரக் கடமையில் ஈடுபடும் பெண்களது மனஅழுத்த நிலையானது மிகவும் உயர்வானது எனக் கண்டறியப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் நிறைவேற்றுத் தரத்திலுள்ள பெண்களில் 23 வீதமானவர்களும் ஆண்களில் 19 வீதமானவர்களும் உயர்வான மன அழுத்தத்தில் உள்ளார்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மன அழுத்தமானது ஒருவரது ஆழ் சிந்தனையைத் தூண்டி நல்ல செயல்களைப் பெற்றுக் கொடுப்பதாக அமையலாம். மன அழுத்தமானது உடல் ரீதியான சமூக ரீதியான மன எழுச்சி சார்ந்த நிலைகளைத் தோற்றுவித்து ஒருவரிடையே பிரச்சினையை ஏற்படுத்துவதாக இருக்கும்.

### மன அழுத்தத்துக்கான காரணிகள்

1. தொழில்சார்ந்த நிலைகள்
2. தொழில்மாற்ற நிலைகள்
3. முரண்பாட்டு நிலைகள்
4. தொழில்சார் தேவைப்பாடுகள்
5. தீர்மானம் மேற்கொள்ளும் நிலையில் ஆதரவு கிடைக்காமை
6. அதீத வேலைச்சுமை அல்லது குறைவான வேலைச்சுமை
7. வசதி குறைந்த வேலை நிலமைகள்
8. குறைவான குழு உணர்வு அல்லது வேலை நிலையத்தில் குழு உணர்வு காணப்படாமை
9. ஆளிடைத்திறன் முரண்பாடுகள்
10. நிறுவன நிலைகளில் ஏற்பட்ட மாற்றம்
11. சமூக ஆதரவு இன்மை

## முகாமைத்துவ உத்திகள்

அழுத்த முகாமைத்துவ உத்திகளாகப் பின்வருவன அமைந்து காணப்படுகின்றன.

1. நேரத்தை முகாமை செய்யக் கற்றுக்கொள்ளல். இதற்காக வேலைகளை முன்னிலைப்படுத்துவதோடு அடையப்படக் கூடிய கிட்டிய இலக்கையும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.
2. நாளாந்தச் செயன்முறையைச் சிறப்பாகத் திட்டமிடல்
3. இடையூறுகளைத் தவிர்த்தல், இங்கு கடமைச் செயற்பாடு தவிர்ந்த ஏனைய விடயங்களைக் கருத்திற் கொள்ளாது தவிர்த்தல் அவசியமானதாகும்.
4. மேலதிகாரிகளுடன் உங்களது வேலைச்சுமை அர்ப்பணிப்பான செயன்முறை தொடர்பில் கலந்துரையாடல்.
5. கடமை நேரத்தில் குறுகிய ஓய்வுகளைப் பெற்றுக் கொள்ளல் இதற்காக உங்கள் இருப்பிடத்தில் இருந்து எழுந்து சற்று உலாவுதல் சகபாடிகளுடன் கலந்துரையாடுதல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.

மன அழுத்தத்துக்கு உள்ளானவர்களுக்கு அதனது தாக்கமானது வேறுபட்டதாக அமைந்து காணப்படும். பய உணர்வு நடத்தை மாற்றம் உணவு விருப்பமின்மை தொடர்ச்சியான அழுகை இறுக்கமான நிலை ஞாபக மறதி சுயஉறுதிப்பாட்டின் குறைநிலை வாழ்வினை இன்பமாக்க முடியாத நிலை போன்ற மனநிலைகளை வெளிப்படுத்துபவர்களாகவும் உள்ளார்கள். நெஞ்சுவலி, வயிற்றோட்டம், அமைதியின்மை, சுவாச இடர்பாடு, தலையிடி போன்ற உடல்சார் குறிகாட்டிகளையும் தூக்கமின்மை, உணவுப் பழக்கத்தை மாற்றுதல், மதுவருந்தும் நிலையைக் கூட்டுதல், குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து நடப்பதனைத் தவிர்த்தல் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமை கடினமான நிலைமைகளை எதிர்கொள்ளமுடியாமை என்பன நடத்தை சார்ந்த மாற்றமாக வெளிப்படுத்துவதாகவும் இருக்கும்.

தொழில்முறையில் அழுத்தம் உருவாவதற்கான காரணங்களாக குறைந்த ஊதியம் அதிகரித்த வேலைப்பளு, முன்னாயத்த வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகின்றமை தொழில் செய்முறை, ஒருவருக்குச் சவாலாக விளங்குகின்றமை, சமூக ஆதரவு குறைவாகக் காணப்படுகின்றமை, தொழிலில் தீர்மானம் மேற்கொள்வதில் அதிகரித்த கட்டுப்பாடுகள் காணப்படுகின்றமை, தேவைகளிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றமை. பாடசாலை, குடும்பம், சமூகம், சுற்றுச்சூழல் ஆகியன கல்விசார் செயன்முறையில் மன அழுத்தத்துக்கான முதன்மைக் காரணிகளாகவுள்ளன.

## தெளிவுள்ள ஒருவரால்தான் முகாமை செய்யமுடியும்

தனது மனஅழுத்த நிலை தொடர்பிலான தெளிவுள்ள ஒருவராலேயே வினைத்திறனான வகையில் அழுத்தத்தை முகாமை செய்யமுடியும். மன அழுத்தத்தை முகாமை செய்வதில் முதற்படியாக விளங்குவது மன அழுத்த நிலைக்கான காரணிகளை தெட்டத் தெளிவாக இனங்காணலாகும். மன அழுத்த நிலையானது எதிர்மறையான நிலைகளைத் தொழிலில் - வாழ்க்கையில் தோற்றுவிப்பதாக இருக்கும். இதனைத் தவிர்ப்பதில் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும்.

மன அழுத்தத்தை இல்லாது செய்தல் அல்லது குறைப்பதற்கான இரு வழிமுறைகளாகப் பின்வருவன காணப்படுகின்றன

1. **தனியாள் அழுத்த முகாமைத்துவ நுட்பங்கள்.**
2. **முறையான மருத்துவச் சிகிச்சை உத்திகள் மற்றும் சிகிச்சை முறைகள்.**

மன அழுத்தத்தை முகாமை செய்ய முற்படுகின்றபோது ஒருவார காலத்தில் தாக்கத்தை உண்டுபண்ணும் நிகழ்வுகளைப் பதிவுசெய்து அவற்றில் எவை மன அழுத்தத்தை தூண்டுவதாகவுள்ளன என இனங்காணலாம். யோகாசனப் பயிற்சியில் ஈடுபடல், தூண்டற் செயற்பாடுகளைக் குறைத்துக்கொள்ளல், தனது செயன்முறைகளுக்கான வரையறைகளை வகுத்துக்கொள்ளல், அலுவலக மின்னஞ்சல்களை வீட்டில் பார்க்காதிருத்தல், இரவு உண்ணும்போது தொலைபேசி அழைப்புகளைத் தவிர்த்துக் கொள்ளல் போன்ற செயற்பாடுகள் மூலம் வேலையுலகுக்கும் வாழ்க்கைக்கும் இடையிலான மன அழுத்தத்தைக் குறைக்க முடியும்.

ஓய்வு விடுமுறைக்காலங்களைப் பொருளுள்ள வகையில் திட்டமிடல், தொழில் செயன்முறையல்லாத நேரத்தில் தொழில் சம்பந்தமான விடயங்களைச் சிந்திக்காதிருத்தல், தியானம் ஆழ்ந்த சுவாசச் செயன்முறையில் ஈடுபடல், மேல்நிலை அதிகாரிகளுடன் சினேகபூர்வ உரையாடல்களை மேற்கொள்ளல், நேர முகாமைத்துவத்தைப் பின்பற்றுதல், சகபாடிகளிடமிருந்து தொழிலுக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளல், நம்பிக்கையான நண்பர்கள்.

இது தவிர நேர்மனப்பாங்கை வளர்த்தல், மன அழுத்தத்தை ஏற்படுத்திய குறித்த நிகழ்வுகள் எனக்கு அப்பாற்பட்டது என்ற உணர்வை வளர்த்தல், சமூக ஆதரவைத் தேடிப் பெறல், ஓய்வு நிலையைப் பின்பற்றல் என்பன மிகவும் பயனுடைய அழுத்த முகாமைத்துவ உத்திகளாகும்.

மன அழுத்த நிலைகளில் இருந்து விடுபடும் ஒருவராலேயே வெற்றிகரமான வாழ்க்கைக் கோலத்தைக் கட்டியெழுப்பமுடியும் என்பதனால் மன அழுத்த முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வருடங்களைக் கடந்தும் நினைவகலாத தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை

■ குமார்

நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் பொலிஸாரும் சிங்கள குண்டர்களும் இணைந்து இந்த மாநாட்டை குழப்பி மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதால் குடாநாடு அல்லோலப்பட்டது.

கடந்த 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி இந்த மாநாடு பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தலைமையுரையுடன் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது. மாநாட்டில் அறிஞர்கள், கல்வி மான்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர்கள் கலந்து கொண்டனர். வீரசிங்கம் மண்டபம் மக்களால் நிரம்பியது. இந்த மாநாட்டை முன்னிட்டு யாழ். நகரே விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது.

எட்டு நாள்களும் இந்த மாநாடு சிறப்பாக, வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. முற்றவெளியில் மக்கள் வெள்ளம் அலை மோதியது. இவை எல்லாவற்றுக்கும் திருஷ்டி கழிப்பது போல, பெரும் கொடூரமொன்று அரங்கேறியது.



விழாக் கோலத்தில் யாழ் நகர் 1974 தை





தமிழாராய்ச்சி மாநாடு, தலைமை உரை. பேரா.சு.வித்தியானந்தன்

ஜனவரி 10 ஆம் திகதி பிற்பகல் வேளையில், மாநாட்டை குழப்பும் நோக்குடன் பொலிஸாரும் குண்டர்களும் இணைந்து மக்கள் மீது சரமாரியாகத் தாக்குதல் மேற்கொண்டனர்.

மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள். மக்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுப் பிரயோகத்தை நிகழ்த்திவிட்டு, துப்பாக்கி சூட்டையும் மேற்கொண்டனர். இதனால் மின்சாரக்கம்பிகளும் அறுந்து விழுந்தன.


மின்சாரக் கம்பிகளிலும் சிக்கி சிலர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் 11 வரையான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

| | |
|---|---|
| சின்னத்தம்பி நந்தகுமார் | (வயது - 14) |
| வேலுப்பிள்ளை கேசவராசன் | (வயது- 15) |
| இராசதுரை சிவானந்தம் | (வயது- 21) |
| பரம்சோதி சரவணபவன் | (வயது- 26) |
| இராசன் தேவரத்தினம் | (வயது- 27) |
| வைத்தியநாதன் யோகநாதன் | (வயது- 33) |
| யோன் பிடலிசர் சிக்மறிற்கம் | (வயது- 53) |
| சிதம்பரி ஆறுமுகம் | (வயது- 55) |
| சின்னத்துரை பொன்னுத்துரை | (வயது- 56) |
| ஆறுமுகம் தில்லைநாயகம் | (வயது- 37) |
| பிலேந்திரன் அருளப்பு | (வயது- 52) |

ஆகியோரே தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிர்க்கொடை ஈந்தவர்கள். ஒரு சில நிமிட கணப்பொழுதில் இடம்பெற்ற இந்த அழிவால் சர்வதேசமே அதிர்ச்சிக்குள்ளானது. தமிழ் மக்கள் மீதும், மொழியின் மீதும் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கொடூரத் தாக்குதல் நடைபெற்று இன்றுடன் 50 ஆண்டுகள் கடந்தாலும் , அது ஏற்படுத்திச் சென்ற வடு இன்னும் காயாமலேயே உள்ளது.

# பிற்போடுதல் எனும் பெரும் குறைபாடு!

■ சி. நற்குணலிங்கம்



உலகம் உச்சவேகத்துடன் இயங்கிக் கொண்டிருக்கையிலும், தாம் அன்றாடம் செய்யவேண்டிய கடமைகளைப் பிற்போடுபவர்கள் பலருள்ளனர். மனோதத்துவ நிபுணர்கள் இதை ஒருவகை இயந்திரச் செயற்பாடு என்கின்றனர். தள்ளிப்போடுதல் என்பது ஓர் அடிப்படை உளவியல் கோளாறின் அறிகுறியாகும். இருப்பினும் இது தனிப்பட்டமுறையில் எமக்கு எது முக்கியம் என்பதை அடையாளம் காண்பதற்கான ஒரு பயனுள்ள வழியாகவும் காணலாம். கையில் இருக்கும் பணியை நீங்கள் உண்மையிலேயே மதிக்கும்போது தள்ளிவைப்பது அரிது. ஒரு நிமிடத்தின் முக்கியத்துவம் புகைவண்டியைத் தவறவிட்டவனுக்குத் தெரியும், ஒரு விநாடியின் மதிப்பு விபத்தில் உயிர் பிழைத்தவனுக்குத் தெரியும். இதனால்தான் 'காலத்தைத் தள்ளிப்போடாதே, தாமதங்கள் அபாயமான முடிவைக் கொண்டுள்ளன' என்கிறார் ஷேக்ஸ்பியர். தள்ளிப்போடுவதற்கு பல காரணங்கள் உள்ளன. மனோதத்துவக் காரணங்கள் பெருமளவில் மாறுபட்டாலும் பொதுவாக கவலை, சுய மரியாதை பற்றிய தாழ்வுமனப்பான்மை, அக்கறை குறைவாக இருத்தல், சோம்பல்தன்மை, பயம், எதிர்த்துப் போராடுவதில் தயக்கம் மற்றும் தன்னைத்தானே தோல்வியாக்கும் மனப்பாங்கு ஆகியவற்றைச் சுற்றியவையாகவே அந்தக் காரணங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. காரியங்களைப் பிற்போடுதலென்பது மிகக் குறைந்த ஒருங்கிணைப்பு, கவனமின்மை மற்றும் அளவு கடந்த அலட்சியப்போக்கை விளைவிக்கும்.

ஒரு நடவடிக்கையை தள்ளிப்போடும் குணாதிசயம் என்பதை வகைப்படுத்தின், அது எதிர்மறையான தேவையற்றதாக மற்றும் தாமதிக்கும் வகையாக இருக்கும். அடுத்து குற்ற உணர்வுப் பிரச்சினை ஏற்படலாம் என்ற உணர்வுகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து மேலும் எதையும் தள்ளிப்போடும் மனப்பாங்கை அதிகரிக்கும். ஓரளவுக்குத் தள்ளிப்போடும் மக்களை இது சகஜம்தான் என மதித்தாலும், இதுவே சகஜமாகிவிட்டால் வேலைகளுக்குப் பாதகமாகிவிடும்.

கற்கும் மாணவர்கள் கற்றலைத் தள்ளிப்போட்டால் இறுதியில் தள்ளித்தான் நிற்க நேரிடும். சிந்திப்பதைக்கூட தள்ளிப்போடுபவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஏன் எனது மூளைக்கு வேலைகொடுக்கவேண்டும். யாரும் வந்தால் அவர்களது மூளையைப் பயன்படுத்தலாம்தானே என்ற சிந்தனையின் வெளிப்பாடே இது. முட்டாளுக்கு மூளை கூட சுமைதான். இது பலருக்குச் சோம்பல் அல்லது சோம்பேறித்தனத்துக்கு ஒத்ததாகும். மன்னிப்புக் கேட்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதனைத் தள்ளிப்போடாமல் உடனும் கேட்பதால் அன்றே நன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. எதையும் தள்ளிப்போடாதீர்கள். ஒருவர் அதிகப்படியாகத் தள்ளிப்போடும்போது பயனற்றதாக உணரமுடிகிறது. பின்னர் சோகம், பதற்றம் போன்ற உணர்வுகள்கூட வந்துசேரும். முடியாது என்று சொல்லவேண்டிய இடத்தில் அதைச் சொல்லாமல் தள்ளிப்போடக்கூடாது. முடியாது என்று சொல்லவேண்டிய இடத்தில் முடியாது என்று சொல்லிவிடுங்கள். இது பல பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தீர்த்துவிடும். நிகழ்காலத்தைத் தள்ளிப்போட நினைக்காதே. நாளை என்பது நிச்சயமற்றது. நிகழ்காலத்தில் நாளாந்தம் வாழப்பழகு. உன்னை நீ அறிந்து வாழ வேண்டும். அறிந்துகொள்வதைத் தள்ளிப்போடாதே. 'தன்னை அறிந்திடில் தனக்கொரு கேடில்லை, தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்' என்கின்றார் திருமூலர்.

ஒரு பொருளை வாங்குமுன் அதுபற்றிச் சிந்திப்பதை தள்ளிப்போடாதே. ஒரு பொருள் வாங்குமுன் அது நம் தேவைக்காகவா? நம் ஆசைக்காகவா? என்ற தெளிவு இருக்கவேண்டும். இருப்பின் சிக்கனம் தானாக வரும். 'சூரியன் என்னை படுக்கையில் பார்த்ததில்லை' என்பது ஜெபர்சன் கூற்று. உன் துடிப்பை தள்ளிப்போட்டு தூக்கத்தில் தொலைக்கலாமா? உழைப்பைத் தள்ளிப்போடாதே. எனினும் இந்த 'பிற்போடும் மனோநிலை' உடையவர்களாக அனைவரையும் கொள்ளமுடியாது. தத்தமது வாழ்க்கை மற்றும் வேலையைப்பற்றிய தெளிவான பார்வைகொண்டவர்கள் இருக்கிறார்கள். எப்போதும் தங்கள் இலக்குகளை நோக்கி வழிநடத்தப்படுகிறார்கள். எனவே பொதுவாகத் தள்ளிப்போடுவதில் அவதானம் வேண்டும். கடமைகளில் கண்ணியம் காத்து வாழும் நாள்களை அர்த்தமுள்ளதாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பரமானந்தரிஸம்’

## கல்வித் தலைமைத்துவத்துக்கான புதியதொரு மாதிரி



மகாலிங்கம் நிரேஸ்குமார்
விரிவுரையாளர்
தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நான்காவது பீடாதிபதியாக பல உன்னதமான செயற்பாடுகள் மூலம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கீர்த்தியையும் புகழையும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் உயர்த்திய கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தத்தின், கல்விச் சேவைப் பயணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராக ஆரம்பித்து, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டம் மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி என்கின்ற உயரிய மகுடம் என்பவற்றுடன் நிறைவுக்கு வருகின்றது. அவரால் பின்பற்றப்பட்ட கல்வித் தலைமைத்துவ மாதிரியை சுருக்கமாக விபரிப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**மென்திறன் தலைமைத்துவம்**

மலர்ந்த முகத்துடனும் புன்சிரிப்புடனும் சேவையாற்றி பணியாளர்களை வசீகரிக்கும் தலைமைத்துவ ஆற்றல், மென்போக்கான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தல், மகிழ்ச்சியுடன் பணியாற்றுதல், மற்றவர்களையும் மகிழ்ச்சியுடன் வைத்திருத்தல், நிதானமாக விடயங்களைக் கையாளுதல், எப்போதும் உதவி செய்வதற்குத் தயாராக இருத்தல், பணியாளர்களின் மனம் நோகாமல் நடத்தல் போன்ற மென்திறன் வெளிப்பாடுகள் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தத்தின் தனித்துவ ஆளுமை அடையாளமாகும்.

இவரது தலைமையின் கீழ், ‘எனது சூழல் நானே பொறுப்பு’ - 2019, ‘ஒரே இலக்கு ஒரே அணி’ - 2020, ‘நல்லதே நடக்கும்’ - 2021, ‘சவால்களைச் சந்தர்ப்பங்களாக்குவோம்’ - 2022, ‘எனது ஆற்றல்களே என்னை வெளிப்படுத்தும்’ - 2023,‘நேர்மைத்திறனே எனது அடையாளமாக...’ - 2024 ஆகிய மகுட வாக்கியங்களுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிறப்பாக இயங்கியது.

நிறுவனத்தில் பணியாற்றுகின்ற அனைத்துப் பணியாளர்களையும் மதித்து நடத்துகின்ற உயர்ந்த பண்பு இவரிடம் நிறையவே காணப்பட்டது. பணியாளர்களது தனிப்பட்ட நலன்களில் அக்கறை செலுத்துதல் அவர்களவு தேவைகள் மற்றும் பிரச்சினைகளை அக்கறையுடன் செவிமடுத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் பணியாளர்களின் மனங்களில் இடம்பிடித்த ஒரு தலைவராக அவர் மிளிர்ந்தார். ஒவ்வொரு பணியாளர்களையும் அவர்களது குறைநிறைகளுடன் ஏற்றுக் கொண்ட சிறந்தொரு தலைவராகவும் காணப்பட்டார்.

**பணியாளரின் செயற்பாட்டுக்கு முழுச் சுதந்திரம் வழங்கியவர்**

நிறுவனத் தலைவர் என்பது ஓர் உயர்ந்த பதவி. பணியாளர்கள் அவரது கட்டளைகளை நிறைவேற்றுபவர்கள் அல்லது பின்பற்றுபவர்கள் என்ற சித்தாந்தத்தை உடைத்து,நிறுவனத் தலைவருக்கும் பணியாளர்களுக்குமிடையிலான இடைவெளியைக் குறைத்தார். ‘நிறுவனத் தலைவர் மாத்திரமே அனைத்தும் அறிந்தவர்’ என்ற சிந்தனையைப் புறந்தள்ளி, பணியாளர்களது சிந்தனைகளுக்கு மதிப்பளித்துச் செயற்பட அனுமதித்தார். பணியாளர்களை சுதந்திரமாகச் செயற்பட அனுமதித்ததுடன் தலையீடற்ற வகையில் மேற்பார்வை செய்தார். நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும், மாணவ ஆசிரியர்களின் விருத்திக்காகவும் பல்வேறு புதிய வாய்ப்புகளை உருவாக்கி வழங்கினார். கல்லூரிக்குத் தேவையான ஏராளமான தொழிநுட்ப வளங்கள் இவரது காலத்தில் பெறப்பட்டன. இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மூலம் மாணவ ஆசிரியர்களின் கற்றல் ஆர்வத்தை அதிகரித்தார். பல்வேறு விதமான இணைப்பாட விதானச் செயற்பாடுகள் நிகழ் நிலையிலும், நேரடியாகவும் மேற்கொள்ளப்பட்டன.

**சவால்களை எதிர்கொண்டு சந்தர்ப்பங்களாக மாற்றுதல்**

உலகப் பெருந்தொற்று நோய்க் காலத்தில், நிகழ்நிலை ரீதியிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு, நாட்டின் அனைத்து தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் ஒரு முன்னோடிக் கல்லூரியாக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விளங்கியது. கொரோனா காலத்தில் இவரின் சிந்தனையில் உருவாகிய குருசேத்திரம் குழுமம் 100 இற்கும் மேற்பட்ட அறிவுப் பகிர்வுத் தொடர் நிகழ்ச்சிகளை நிகழ் நிலையில் நிகழ்த்தியது.

அதிபரவர்கள் இயற்கையின் மீது அளவில்லா அன்புள்ளவராகவும் இருந்தார். இதனால் தான் கல்லூரியின் சுற்றாடலை பிளாஸ்ரிக் பாவனையற்ற பிரதேசமாகப் பிரகடனம் செய்தார். கல்லூரியிலும் அதன் அயற் சூழலிலும் ஏராளமான மரங்கள் நாட்டப்பட்டன. மாணவ ஆசிரியர்கள் வாயிலாகவும் இவ்வுன்னதமான பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டுமல்லாமல், கல்லூரியின் செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்காக ‘குருதீபம்’ என்ற செய்திப் பத்திரிகையை அறிமுகம் செய்துவைத்தார். தொடர்ச்சியாக 57 செய்திப் பத்திரிகைகள், 10க்கும் மேற்பட்ட மணிவிழா சிறப்புச் செய்திப் பத்திரிகைகள் வெளிவந்துள்ளன.

அதிபர் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தத்தின் காலப்பகுதி (31.03.2009 - 12.01.2023) யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வரலாற்றில் இன்னுமொரு பொற்காலமாக அமைந்தது என்றால் அதில் மறுகருத்தில்லை.

## தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாளில் சான்றோர்கள் ஐவருக்கு சிவத்தமிழ் விருது



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் 99ஆவது பிறந்தநாள் அறக்கொடைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அன்ன பூரணி மண்டபத்தில் மேற்படி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் பா.பாலகோபி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவக்கலாநிதி ஏ.தேவநேசன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.கணேஷ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா, மருத்துவக் கலாநிதி சி.அருளானந்தம், ஓய்வுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், நாதஸ்வர வித்துவான் இ.கேதீஸ்வரன், ஓய்வுநிலை அதிபர் மு.அருணாசலம் ஆகிய சான்றோர்கள் ஐவருக்கான ‘சிவத்தமிழ் விருது’ வழங்கிக் கௌரவமளிக்கப்பட்டது.

அன்னையின் பிறந்தநாள் அறக்கொடையாகத் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு இரண்டு இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டதுடன் உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரத்தில் கல்வி பயிலும் மிகவும் பொருத்தமான 50 மாணவர்களுக்கு சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியம் ஊடாக கல்வி நிதியும் வழங்கி வைக்கப்பட்டது. (66)

## தமிழாராய்ச்சி மாநாட்டின் 50ஆவது நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைத் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் கூட்டி 50 ஆண்டுகள் நிறைவடைவதை நினைவுகூரும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை குருநகர் கலையரங்கத்தில் பங்குத்தந்தை அருட்பணி அருளானந்தம் ஜாவிஸ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணம் தனிநாயகம் அடிகள் ஆய்வு மன்றத்தின் இணைப்பாளர் அருட்பணி கலாநிதி அ.பி.ஜெயசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வின் ஆரம்பத்தில் கலையரங்கின் அருகில் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது நிறுவப்பட்ட சுவாமி ஞானப்பிரகாசரின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரைகளை ஆற்றினர். அத்துடன் நடன நிகழ்வும், கும்பகர்ணன் தென்மோடி நாட்டுக் கூத்தும் நடைபெற்றது. (ம-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA – SRI LANKA
## INVITATION FOR BIDS (IFB)
## STILL PHOTOGRAPHY FOR 38th ANNUAL GENERAL CONVOCATION – 2024

1. The Chairman, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Still Photography to cover 38th Annual General Convocation - 2024 of the University of Jaffna which is scheduled to be held on 06th, 07th and 08th of February, 2024.

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five-year experience in relevant field.

3. Interested bidders may obtain further information from the Finance Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the Bidding Documents at the same address on any working day from 0900hrs to 1500 hrs. Contact number: 021 2210962

4. A complete set of bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Bursar (Supplies I) Finance Branch, University of Jaffna until 29th January 2024 from 0900 hrs to 1500 hrs upon payment of a non-refundable fee of Rupees two thousand (Rs.2000/-) to be deposited to the Peoples Bank, University of Jaffna with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip.

5. Bidding document and other details will be available in the University website www.jfn.ac.lk.

6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Assistant Bursar (Supplies I) Finance Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Finance Branch to reach on or before 10.00 am on 30th January 2024. Bids will be opened soon after closing at 10.00 am on 30th January 2024 at the Finance Branch in the presence of the bidders' representatives who choose to attend.

7. Bids shall be valid at least for a period of 60 Days from the date fixed for receiving of Bids or any extended date.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna"
   - For an amount of Rs. 15,000/=
   - Issued by one of the agencies (Banks) acceptable to the client.

9. Pre-Bid meeting will be held on 16th January, 2024 at 10.00 am in the Finance Branch, University of Jaffna.

Vice Chancellor,
University of Jaffna,
Thirunelvely, Jaffna
09.01.2024

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 03 . 1945



இறப்பு 08 . 01 . 2024

### செல்வரஞ்சிதமலர் (பெரியபிள்ளை) செல்லத்துரை

அம்பனை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரஞ்சிதமலர் (பெரியபிள்ளை) செல்லத்துரை நேற்றுமுன்தினம் (08.01.2024) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், செல்லத்துரையின் அன்பு மனைவியும், பிரியதர்சினி, ஜனந்தன், சர்மினி ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்தில்குமரன், ஜானகி, உதயணன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மிதுராம், வைஷ்ணா, ஆயணி, அகரன், ஆரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஞானரஞ்சிதமலர், சரோஜினிதேவி மற்றும் சாரதாதேவி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அம்பனை மேற்கு,
சுன்னாகம்.

(cs 53476) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்.
0094740816253

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 10 . 1959



மறைவு 09 . 01 . 2024

### Lion காளிக்குட்டி முத்துக்குமார்

(Saje Motors / Saje Agri, கிளிநொச்சி-உரிமையாளர்.)

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட Lion காளிக்குட்டி முத்துக்குமார் (Saje Motors / Saje Agri - உரிமையாளர்) அவர்கள் நேற்று (09.01.2024) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காளிக்குட்டி அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும், மரியதாசன், இரத்தினாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெனீவியின் அன்புக் கணவரும், பிரவீனா, பிரியந்தி, சஜீசன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், கோகுலன், பிரதீபன், சுவேதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வதா, அக்ஷதா, நிர்மயி, பிரணீஷ், ஹரீஷ் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற லீலாவதி, காலஞ்சென்ற வல்லிபுரம், சந்திரசோதி, ஜெகசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2024) வியாழக்கிழமை பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுகொள்கின்றோம்.

119/10, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 6004 820

(CS 23781) A-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
### குமாரசாமி சச்சனாமூர்த்தி



மண்ணில் 27.11.1951 விண்ணில் 11.12.2023

அன்புடன் அரவணைத்து
எம்மையெல்லாம் ஆளாக்கிவிட்டு
ஆண்டவன் அடியில்
அமைதியாய் உறங்கிவிட்டீர்கள்.
மாதம் ஒன்று ஆனாலும்
ஆண்டுகள் பலநூறு ஆனாலும்
ஆறாது எம்மனம் - உங்கள்
பிரிவை எண்ணி
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (10.01.2024) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மதியபோஷன நிகழ்வும் இடம்பெறும். எனவே இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.

(CS 27575) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 வருட நீங்காத நினைவலைகள்



### அமரர் ஜே.எவ்.சிக்மறிங்கம்

(முன்னாள் ஆசிரியர் - பரி. யோவான் கல்லூரி - யாழ்ப்பாணம்)

அன்பும் சேவையும் அறமெனக் கொண்டு
பண்பும் பரிவும் பாசமும் காட்டி
கல்வியில் சிறந்து, கலைகளில் நிறைந்து
ஆளுமைச் சிறப்பால், அனைவரையும் கவர்ந்து
விளையாட்டில் வீரனாய், பெருமைகள் பல ஈட்டி
நல்லவன் வல்லவன் நமக்கு உதவுவோன் எனப் போற்றிட
அநீதியை எதிர்க்கும் சான்றோனாய் வாழ்ந்து
சோகத்தில் ஆழ்த்தி பிரிந்து சென்று
ஆண்டுகள் ஐம்பது ஆயினும்
நினைக்கும் போதெல்லாம் இதயத்தில் நிலையாய்
- இருந்து சிரிக்கின்றீர்
பனிக்கும் கண்கள் தவிக்கும் இதயம் கொண்டு
இறைவன் ஐக்கியத்தில் நீங்கள் இருக்க
- நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

'உங்கள் பாதப் பதிவுகள் எமது வாழ்வின் தெரிவுகள்'

235, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 • 11 • 1975



மறைவு 09 • 01 • 2024

### செல்வி சுந்தரலிங்கம் நிரஞ்சலா

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.64, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்வி சுந்தரலிங்கம் நிரஞ்சலா நேற்று (09.01.2024) செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், ரமேஸ்குமாரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நல்லதங்கம், கணபதிப்பிள்ளை - விசாலாட்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகாலிங்கம் - பத்மாவதி, காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புப் பெறாமகளும், திரு.திருமதி பஞ்சாட்சரம், இராஜேஸ்வரி, திரு.திருமதி செல்லத்துரை (சுந்தராஜா), மங்களேஸ்வரி, காலஞ்சென்ற கனகரெத்தினம் - மகேஸ்வரி, புவனேஸ்வரி - குகநேசன், யோகேஸ்வரி - பத்மநாதன், லீலாவதி, காலஞ்சென்ற கமலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.64, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.
077 477 4997
076 464 1732

தகவல்:
தாயார் சு. சரஸ்வதி
சகோதரன் சு.ரமேஸ்குமார்

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை: 50ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 10

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 50ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, இன்று புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள முற்றவெளி மைதானத்தில் உள்ள நினைவுத்தூபியில் இடம்பெறவுள்ளது. (ம-66-125-17)

## பெண் உதவியாளர் / பராமரிப்பாளர் தேவை

வயதான பெண்மணியை வீட்டில் தங்கியிருந்து உதவிகள் செய்து பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை. உணவு மற்றும் தங்குமிடத்துடன் நல்ல ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு:076 220 6863

## பிரிவுபசார விழா

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்று இடமாற்றல் பெற்றுச் செல்லும் அலுவலர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று மு.ப. 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-9)

## GSHL Green Solar Holdings Lanka Pvt Ltd

**WE ARE HIRING JUNIOR ACCOUNTANT**

**Responsibilities**

01. Process payments & quotations.
02. Issue invoices to customers based on services.
03. Make and track payments.
04. Book keeping and keep up records.
05. Key data in to company accounting system.
06. Responsible for the proper coding & reconciliation of all career commission statement to individual client account.
07. Assist in the processing of daily cash receipts, as necessary.

**Requirements & qualification**

1. Should have diploma/ higher diploma/ degree in accounting.
2. Should have knowledge in accounting package.
3. Age preferably below 35 years
4. Apply only boys those who living in Jaffna / Nelliady.
5. Minimum of one experience in accounting or finance.


Interested candidates can apply on or before 14.01.2024 through indeed using the mail your CV via :

accounts@gshl.lk OR info@gshl.lk

For more information contacts us +94212261044

கொலின்ஸ் விளையாட்டு கழக ஏற்பாட்டில்
CJ PROMOTERS ரேனுகா பந்தல் நடாத்தும்

## CARNIVAL



இடம்: கொலின்ஸ் விளையாட்டு மைதானம் (குஞ்சர் கடையடி, நெல்லியடி)

காலம்: ஜனவரி 11ம் திகதி முதல் ஜனவரி 15ம் திகதி வரை

தொடர்புகளுக்கு:
0772546511, 0775002840

## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவை செய்வதற்கான கேள்வி கோரல் - 2024

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ள வர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்வி விபரம் | தகைமை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/DGH/KOC/2024 / SA / 01- L | சலவைச் சேவை | கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்ட தகமைகள் | 50,000.00 | 10.02.2024 |

1. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராக இருத்தல் வேண்டும் அத்துடன் அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருப்பதோடு மூன்று வருட அனுபவத்துடன் தரவு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமையினை பூர்த்திசெய்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை மாவட்ட வைத்தியசாலை, A9 வீதி ,கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 10.01.2024 ம் திகதியிலிருந்து 23.01.2024 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
3. கேள்விகள் 24.01.2024 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகை இலக்கத்தினை அதாவது NP/DGH/KOC/2024/SA/01- L என தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
4. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல-0212284111) எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப்பெறுகையினை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
6. கேள்வி ஆவணமானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 60 நாட்கள் (10.03.2024) வரையும் செல்லுபடியாகும்.
7. **கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 17.01.2024 திகதி பி.ப 14.30 மணிக்கு, மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி எனும் முகவரியில் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.**

**தலைவர்,**
**பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.**

(CR 1486) N.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாவது ஆண்டின் நீங்காத நினைவலைகளில்...!

மண்ணில் 16 . 12 . 1967



விண்ணில் 10 . 01 . 2018

பேராசிரியர் கலாநிதி

### ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினம்

(முன்னாள் விரிவுரையாளர் - ஆங்கில இலக்கியம். தென்கிழக்கு. கிழக்குப் பல்கலைக்கழகம்.
பேராசிரியர் - எதியோப்பியப் பல்கலைக்கழகம். எதியோப்பியா

கென்னடி !
காரைநகர் கண்ட கவித்துவமேதை!
அகிலம் போற்றிடும் அறிவாளன்
ஒப்பற்ற சிந்தனையாளன் !
தன்னலமற்ற தொண்டு புரிந்தவன்
தனித்தன்மை கொண்டவன்
தன் சிந்தனைப் பேச்சால் மக்களைக் கவர்ந்தவன்
மறக்கமுடியாத ஒரு இளம் காவியம் !
வருங்கால இளைஞர்களின் முன்னோடி !
கென்னடி ஒரு தனி சகாப்தம் !
காரைநகர் சிவனின் பாதமலர் சேர்ந்தாயோ ?
கென்னடியின் உதிர்வு
எமது மண்ணுக்கும் இனத்துக்கும் பேரிழப்பாகும்....

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

"சண்முகனின் வாசம்"
நீலிப்பந்தனை,
காரைநகர்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், நண்பர்கள்,
உறவினர்கள், ஆசிரியர்கள்,
புலம்பெயர் வாழ் நண்பர்கள்.

(ஐ26757)

## 90 ஆம் நாள் நினைவு நாள் அழைப்பு



தோற்றம் : 15.04.2006 மறைவு : 16.10.2023

கடந்த (16.10.2023) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

அமரர்

### சுரேஸ்குமார் (கரிகரன்) தணிகை

அவர்களின் 90 ஆம் நாள் நினைவு கிரியைகள் நாளை (11.01.2024) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 13.01.2024 சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங் களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த் தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

D7, பெரியபரந்தன்
கிளிநொச்சி.

தொ.பே:077 543 1245

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 01 ஆம் ஆண்டு நினைவேந்தல்

தோற்றம் 01.04.1950 மறைவு 10.01.2023

அமரர்

### கைலாசபிள்ளை சீவரத்தினம்
### (பஞ்சலிங்கம்)

(யா/வேம்படி மகளிர் கல்லூரி, யா/மத்திய கல்லூரி
முன்னாள் ஆசிரியர்)



நண்பனாய், மந்திரியாய்,
நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய்
எம் வாழ்க்கையிலே ஒளி விளக்காய்...
ஈங்கிவனை யாம் பெறவே
என்னதவம் செய்துவிட்டோம்.

நெஞ்சில் என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

(CS 276...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நீதிமன்றங்களில் நெருக்கடியான இயங்குநிலை

## யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதியிடம் சட்டத்தரணிகள் குழு சுட்டிக்காட்டு!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சட்டத்தரணிகள் எதிர்கொள்ளும் இன்னல்கள், நெருக்கடிகள் மற்றும் குறைநிறைகளைக் கேட்டறிந்தார்.

இதன்போது அதிகமான வழக்குகள் நிலுவையில் உள்ளமை, யாழ்ப்பாணம் நீதிமன்றத் தொகுதியில் சட்டத்தரணிகள் எதிர்கொள்ளும் இடநெருக்கடி, யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் நிலவும் மொழிபெயர்ப்பாளர் பற்றாக்குறை, இளம் சட்டத்தரணிகளை அடுத்தகட்டத்தை நோக்கி நகர்த்திச் செல்வதற்குத் தேவைப்படும் நடவடிக்கை, காணிப் பதிவகத்தில் நிலுவையிலுள்ள காணிப் பதிவுகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் சட்டத்தரணிகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன், சந்திப்பில் கலந்து கொண்டவரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவருமான சட்டத்தரணி பா.தவபாலனால் 14 கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பில், சட்டத்தரணிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்த விடயங்களின் சாரம்சமாவது:-

**தேக்கமடையும் வழக்குகள்**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் குடியியல், குற்றவியல் வழக்குகள் நீண்டகாலமாகத் தேக்கமடைந்து வருகின்றன. பல நீதிபதிகள் மாற்றலாகிச் செல்கின்றபோதிலும் வழக்குகள் முடிவுறா நிலையிலேயே காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஊழியர்களும் சட்டத்தரணிகளும் மிக அர்ப்பணிப்புடன் பணி செய்து வழக்குகள் முடிக்கப்படாதிருக்கின்றமைக்கு நீதிமன்றங்களின் பற்றாக்குறையே பிரதான காரணமாக இருக்கின்றது. எனவே தற்போது இருப்பதை விடவும், ஒரு மேல் நீதிமன்றம், ஒரு மாவட்ட நீதிமன்றம், ஒரு மேலதிக நீதிவான் நீதிமன்றம் என்பன அமைக்கப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படும் பட்சத்தில் வழக்குகள் காலதாமதமின்றி முடிவுறுத்தப்படும்.

**நீதிமன்றில் இடப்பற்றாக்குறை**

யாழ்ப்பாணம் நீதிமன்றத் தொகுதியில் சட்டதரணிகளின் பாவனைக்கு போதிய இடம் இல்லாமல், இடப்பற்றாக்குறை நிலவுகின்றது. 100க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் கடமைபுரியும் நிலையில் அவர்களுக்கு அத்தியாவசிய இடவசதி இல்லாதுள்ளது. எனவே சட்டத்தரணிகளின் பாவனைக்கான இடத்தை போதிய மேம்படுத்தலுடன் ஏற்படுத்தித் தரவேண்டும்.

**மொழிபெயர்ப்பாளர் இல்லை**

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல நீதிமன்றங்களிலும் மிக நீண்டகாலமாக தமிழ், சிங்கள, ஆங்கில மொழி பெயர்ப்பாளர்கள் பற்றாக்குறை காணப்படுவதால் ஏராளமான வழக்குகள் தேக்க நிலையில் உள்ளன. எனவே போதியளவு மொழிபெயர்ப்பாளர்களை ஏற்படுத்தித் தரவேண்டும்.

**சட்டத்தரணிகளை மேம்படுத்த**

மூன்று தசாப்தங்களாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பெரும் போர் நடவடிக்கைகளால் நிபுணத்துவம் வாய்ந்த, குடியியல் மற்றும் குற்றவியல் சட்டத்தரணிகள் வெளியேறியுள்ளனர். ஆதலால், அவர்களுக்கு அடுத்திருப்பவர்களின் சட்டப்புலமையை மேம்படுத்த மேலதிக கருத்தரங்குகள் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் சட்டங்கள் தொடர்பான தெளிவூட்டல்களைதுறைசார்ந்தவர்களூடாக வழங்க விசேட நிதி ஒதுக்கீடு ஏற்படுத்தப்படவேண்டும். அத்துடன் நூற்றாண்டுப் பழமைவாய்ந்த ஆவணங்களையும், வழக்குகளையும் கணினிமயப்படுத்த தேவையான தொழில்நுட்ப அறிவுவாய்ந்த மனித வளங்களை ஒதுக்கீடு செய்துதரவேண்டும்.

**முடிவுறாத காணிப்பதிவு**

யாழ். மாவட்டத்தில் பிரதிப் பதிவாளர் நாயக அலுவலகத்தின் கீழ் வரும் காணிப் பதிவகத்தில் நாளாந்தம் ஏராளமான காணி உறுதிகள் பதிவு செய்வதற்கு வருவதாலும், போர்க் காலத்தில் பல ஆவணங்கள் மற்றும் உறுதிகள் அழிந்துவிட்டதாலும், உறுதிப் பிரதி மற்றும் தோம்பு என்பனவற்றைப் பெறுவதற்காக நூற்றுக்கணக்கானோர் காணிப் பதிவகத்துக்கு வருகை தருகின்றனர். ஆனால், அலுவலக உதவியாளர்கள் இல்லாமையால் அந்தக் கடமைகளை சரிவர நிறைவேற்ற முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே இந்த ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தித்து பொதுமக்கள் சேவையைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மேன்முறையீட்டு நீதிமன்றில் தமிழ் மொழிக்கும் இடம்!**

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களால் வழங்கப்படும் தீர்ப்புக்கு எதிராக கொழும்பில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் உயர் நீதிமன்றத்துக்கும் மேன்முறையீடு செய்யப்படும்போது வடக்கு - கிழக்கு நீதிமன்ற மொழி தமிழிலேயே உள்ளதால், மொழிபெயர்ப்பதற்கு பெருந்தொகைப் பணச்செலவும் காலதாமதமும் ஏற்படுகின்றது. எனவே இதை நிவர்த்திப்பதற்காக கொழும்பில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தமிழ்பேசும் மூன்று நீதியரசர்களையும், தமிழ் பேசும் ஐந்து உயர்நீதிமன்ற நீதியரசர்களையும் நியமிப்பதற்கு பணிப்புரை வழங்கவேண்டும் என்றவாறாக அவர்கள் ஜனாதிபதி ரணிலிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-125)

---

### யாழ்ப்பாணத்திலேயே...

டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினரின் தகவல்களின் அடிப்படையில், கடந்த முதலாம் திகதி தொடக்கம் 8ஆம் திகதிவரையான எட்டு நாள்களில் யாழ்ப்பாணத்தில் 448 பேர் டெங்குத் தொற்றுடன் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இலங்கையில் இவ்வருடம் மாவட்ட அடிப்படையில் அதிக டெங்குத் தொற்றாளர்கள் பதிவான மாவட்டமாக யாழ்ப்பாணமே காணப்படுகின்றது. கடந்த வருடம் அதிதீவிர தொற்று நிலையைக் கொண்டிருந்த கொழும்பில் இவ்வருடம் 284 டெங்குத் தொற்றாளர்களே இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 258 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 93 பேரும், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 35 பேரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 33 பேரும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 29 பேருமாக குறித்த எட்டு நாள்களில் டெங்கு நோய்ப்பாதிப்புடன் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கை 448ஆக உள்ளது.

அனைவரும் தத்தம் வீட்டுச் சூழல் மற்றும் சுற்றுச்சூழலில் மழை நீர் தேங்காது பார்த்துக் கொள்வதன் ஊடாகவும், மழை நீர் தேங்கும் பொருள்களை அகற்றியும் புற்கள் பற்றைகளை துப்புரவு செய்வதன் ஊடாகவும் டெங்கு நோய் பரவும் ஏதுநிலையினை ஆரம்பத்திலேயே இல்லாது செய்து உங்களையும், சமூகத்தையும் டெங்கு அபாயத்தில் இருந்து பாதுகாக்க முடியும் என சுகாதாரத்தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். (அ-ம-100)

### மேன்முறையீடுகளை...

பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் மேன்முறையீடுகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

இதன்போது, வழக்கு தொடர்பான சிங்கள மொழிபெயர்ப்புப் பிரதிகளை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்து, குறித்த மேன்முறையீட்டு மனுக்களை எதிர்வரும் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கும் நீதியரசர்கள் ஆயம் தீர்மானித்துள்ளது. (அ-ம-125)

### 23 ஏக்கர்...

வலிகாமம் வடக்குப் பகுதியில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணி இராணுவத்தினரின் பிடியில் காணப்படுகின்றது. இந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று அண்மையில் ஜனாதிபதி ரணில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தபோது அவரிடம் வலியுறுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே வறுத்தலைவிளானில் காணப்படுகின்ற 23 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிக்கவுள்ளதாக இராணுவத்தினரால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

### ஒற்றுமை,...

சட்டவரைவின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நேற்று முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5 மணிவரை இடம்பெற்றது. விவாதத்தை அடுத்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சட்டவரைவுக்கு வாக்கெடுப்புக் கோரினார்.

அதற்கமைய இடம்பெற்ற வாக்கெடுப்பில் சட்டவரைவுக்கு ஆதரவாக 48 வாக்குகளும், எதிராக 7 வாக்குகளும் வழங்கப்பட்டன. இதன்படி, சட்டவரைவின் இரண்டாம் மதிப்பீடு 41 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (அ-ம-44)

### மாவட்டச்...

கட்டுப்படுத்த மாவட்ட ரீதியாக பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குடியிருப்புகள், அலுவலகங்கள் என்பன தொடர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுவரும் நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று சோதனை நடத்தப்பட்டது. இந்தநிலையிலேயே அங்கு பல இடங்களில் டெங்குக் குடம்பிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

### யாழ். மாவட்டத்தில்...

பெற்றிருந்தனர். இந்த நிலையில் தற்போது வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

### ஜனவரி...

சிறப்பிக்கவுள்ளார். குறித்த பொங்கல் நிகழ்வில் சம்பிரதாயபூர்வமாக புதிர் எடுத்து பொங்கல் இடம்பெறவுள்ளது. தொடர்ச்சியாக வடமாகாணத்தின் பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் முகமாக கலை நிகழ்வுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ம-125)

### ஆணொருவர்...

செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110-18)

### ஆசிரியர்...

அறுத்ததுடன், ஒருதொகைப் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். கொள்ளை தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறநெறி ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வளவாளராக கனடா சைவசித்தாந்த பீடத்தின் நிறுவுநர் மருத்துவ கலாநிதி லம்போதரன் கலந்துகொண்டார். (ச-75)

# காட்டுக்குள் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்

## யானை தாக்கியது என உடன்சென்றவர்கள் தெரிவிப்பு

மன்னார், ஜன. 10

மன்னார், முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாலக்குளி பகுதியில் காட்டுக்குச் சென்ற நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவருடன் இன்னும் 5 பேர் சென்ற நிலையில், 'யானை தாக்கியதால்தான் அந்த நபர் உயிரிழந்தார்' என்று உடன் சென்றவர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

இந்த ஆறுபேர் அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் காட்டுக்குள் சென்றுள்ளனர். இதன்போது காட்டுயானை அவர்களை விரட்டியுள்ளது. ஒருவர் யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். ஏனைய ஐந்து பேரில் இருவர் புத்தளம் பகுதிக்கும் மூவர் அவர்களின் கிராமத்துக்கும் தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச்சென்றவர்களில் ஒருவர் திரும்பி வந்து வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் புத்தளம் பகுதிக் காட்டுக்குள் சென்ற இருவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலவன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-213)

# பிரிட்டனின் இளவரசி இலங்கை வருகிறார்

கொழும்பு, ஜன. 10

பிரித்தானிய அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசி மற்றும் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் மூன்று நாள்கள் பயணமாக இன்று இலங்கைக்கு வரவுள்ளனர்.

இலங்கை மற்றும் பிரிட்டனுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இந்தப் பயணம் அமைந்துள்ளது.

இந்த மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தில் பிரிட்டன் இளவரசி, கண்டி மற்றும் கொழும்பில் உள்ள மத ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தலங்களுக்கு செல்லவுள்ளதோடு, தனது பயணத்தில் அப்பிரதேச சமூகங்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் சந்திப்புகளையும் மேற்கொள்ளவுள்ளார். அத்துடன் இந்தப் பயணம் 2024ஆம் ஆண்டு அரச குடும்பத்தின் முதல் வெளிநாட்டுப் பயணமாக அமையுமென்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (ம-20)





முல்லைத்தீவு குமுழமுனையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. கம்பர்மலை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அமரர் அருமைச்சோதிலிங்கம் றோசாவதிவதியின் 4 ஆவது நினைவு தினத்தையொட்டி அவரது குடும்பத்தினரால் இந்த உதவி கையளிக்கப்பட்டது. 41 குடும்பங்களுக்கு ஒரு லட்த்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச-13)


**வீடு வாடகைக்கு உண்டு**

பலாலி றோட் கந்தர்மடம் சந்திக்கு அண்மையில்.
வாடகை 1,10,000 (ஒரு லட்சத்தி பத்தாயிரம்)
T.P: 077 3068 993

**பணியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் நகை வியாபார நிலையத்திற்கு அனுபவமுள்ள / பழக விரும்பும் நகை விற்பனையாளர்கள் தேவை.
முற்பகல் 10.00 மணிதொடக்கம் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 076 247 0257

**விசாக்கான Show money**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
- visit visa
- student visit visa
- fixed & saving
- All travel documents

மிகக் குறைந்த கட்டணத்தில்!
தொடர்பு: 075 033 6759

**அறைகள் வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மருத்துவக்கல்லூரிக்கு அருகாமையில் 10 நிமிட நடைதூரத்தில் அமைந்துள்ளது. மேல் மாடியில் மருத்துவக்கல்லூரி மாணவிகள் தங்கியுள்ளனர். கீழ் மாடிக்கு மருத்துவக்கல்லூரி தமிழ் மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 076 794 4001

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கல்வியங்காடு, டச்சு றோட் முகப்புடன் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. G.P.S விளையாட்டு அரங்கு வீதி முகப்புடனும், 20 அடிப் பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
தரகர் தேவையில்லை.
**பார்வையிடும் நேரம் :**
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 வரை
தொடர்பு: 077 4546 538
075 6385 684

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு எதிராக 3 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**
- யாழ்ப்பாணம் பலாலி வீதி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில்
- இராமநாதன் வீதி முகப்புடன்
- 1 பரப்பு, 1 பரப்பு, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் மாலை 6.00 வரை

தொடர்பு: 071 173 3911, 076 853 5022


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... உள்ள அவர்களது பணிமனையில் 10.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org